முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:- திரு.கே.கமலநாதன், பி.எஸ்சி.,பி.எல்.,
(கூடுதல் பொறுப்பு)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07-ம் நாள் புதன்கிழமை

இடை மனு எண்.634/2021 in அசல் வழக்கு எண்.31/2017

ராஜேந்திரன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

ராமமூர்த்தி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் 24.08.2022 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.செல்வக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சேகர், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

மனுதாரருக்கு எதிராக 22.9.2021 அன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கு 31-2017ஐ மீண்டும் கோப்பிற்கு எடுக்கக் கோரி, மனுதாரரால் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 9-ன் தாக்கல் செய்த மனு.

2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து அது நிலுவையில் வாதுரைக்காக ஒரு சில திருத்தம் செய்யஇடைமனு தாக்கல் செய்து அதன் பேரில் அது ளவநிள உன பல வாய்தாகக்ல் சென்றதாகவும். மேலும் மேற்படி மனுவில் ளுவநிள எடுக்காததால் நிதிமன்றம் தனது மனுவையும் அசல் வழக்கையும் சேர்த்து தள்ளுபடி செய்து கடந்த 22.9.2021 அன்று உத்தரவிட்டது என்றும் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் தான் தனது வழக்கறிஞரை சந்தித்த நிலையில் சொல்ல இயலவில்லை என்றும் அதன் காரணமாக மேற்படி தவறு நிகழ்ந்தது என்றும் மற்றபடி தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ

தனது வழக்கை தள்ளுபடிக்கு விடவில்லை என்றும், எனவே மனுதாரருக்கு எதிராக 22.9.2021 அன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. *எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:*

எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், சரியாக மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணத்தை செலுத்தாமல் ரூ.1000- என வழக்கு சொத்தை மதிப்பீடு செய்து பிரிவு 25(ஏ)ன் கீழ் நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், இதுகுறித்த தாங்கள் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளதாகவும், 19.6.1998ல் அந்த நிலத்தை ரூ.3500க்கு வாங்கியுள்ளதாகவும், இந்த எதிர்மனுதாரர் இடைமனு 248-2017 என்ற மனுவை பிரிவு 12(3)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் ரூ. 30 லட்சம் மதிப்பில் இந்த எதிர்மனுதாரர்கட்டிடம் கட்டியுள்ளதாகவும், அதில் இந்த மனுதாரர் கட்சி செய்ததாகவும், வழக்குசொத்தின் பௌதீக தன்மைகளை கண்டறிய இடைமனு 247-2018 தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டதாகவும், நீதிமன்ற அறிக்கையில் வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.25,15,000- என கணக்கீடு செய்யப்பட்டதாகவும், எனவே நீதிமன்றம் 3.3.2021ல் மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை 1 மாத காலத்திற்குள் செலுத்தவும் பிராதினை திருத்தம் செய்யவும் ஆணையிட்டதாகவும், 6 மாதங்கள் ஆகியும் இன்னமும் மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை என்றும், எனவே 22.9.2021 அன்று வழக்கானது தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மனுதாரர் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால்தான் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் இந்த மனு அனுமதிக்கப்பட வேண்டுமானால் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றிய பின்னர் இம்மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு சொத்திற்கு உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும், இந்த வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றும், இது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட வேண்டியது என்றும், வழக்கு சொத்தை ரூ.24,080- என்றும் நீதிமன்ற கட்டணத்தை ரூ.723- என தாக்கல் செய்தும் மீண்டும் மோசடியான முறையில் திருத்தப்பட்ட பிராதினை தாக்கல் செய்துள்ளதாகவும், எந்த இடத்தை மனுதாரர் காட்டுகிறார் என்று தெரியவில்லை என்றும், 2வது அயிட்டத்திற்கு தனியாக மனு செய்துள்ளதாகவும், அந்த மனுவும் சரியான முறையில் இல்லை என்றும், திருத்தம் செய்யப்படாமல் வழக்கு மீண்டும்

கோப்பிற்கு எடுக்கப்படாது என்றும், இந்த மொத்த நடவடிக்கையே தவறு என்றும், குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தியதற்கு சரியான விளக்கம் இல்லை என்றும்,, மனுவில் உள்ள காரணங்கள் மிகவும் அலட்சியமாக உள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செயய் இந்த எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, 22.9.2021 அன்று தவறுகைக்காக அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அசல் வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில், குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்கும்படியாகவே இருந்தாலும் மனுதாரர் தனது தரப்பை நிருபணம் செய்ய மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இம்மனுவினை அனுமதிப்பது தான் சரியானதாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களுக்கு மனுதாரர் அவருக்கு இம்மனுவின் செலவுத்தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார். மேலும் அசல் வழக்கில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.500ஐ 14.9.2022. தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தன்னிச்சையாக தள்ளுபடியாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க 14.9.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 7.9.2022ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K KAMALANATHAN

Digitally signed by K KAMALANATHAN
Date: 2022.11.30 11:46:11 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC)